**செய்தி வெளியீடு எண்.18/2017** **நாள் : 13.03.2017**

**குடிநீர் இணைப்பிலிருந்து மின் மோட்டார் மூலம் குடிநீர் உறிஞ்சிய வீடுகளின் இணைப்பு துண்டிப்பு – குடிநீர் வாரியம் நடவடிக்கை.**

-----

குடிநீர் வாரிய குழாய்கள் மூலம் விநியோகம் செய்யும் குடிநீரை சிலர் மின் மோட்டார் மூலம் உறிஞ்சுவதாக வந்த புகார்களை அடுத்து சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., அவர்கள் பொறியாளர்களை சோதனையில் ஈடுபடுமாறு அறிவுறுத்தினார்கள்.

மேலாண்மை இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க பகுதிப் பொறியாளர்கள் அந்தந்தப் பகுதிகளில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வாறு சென்னைக் குடிநீர் வாரிய அதிகாரிகளால் வில்லிவாக்கத்தில் சோதனை மேற்கொண்டபோது பஜனை கோயில் முதல் தெருவிலுள்ள சில வீடுகளில் குடிநீர் வாரிய பகிர்மான குழாயிலிருந்து நேரடியாக குடிநீரை மின் மோட்டார் மூலம் உறிஞ்சி எடுப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக அந்த வீடுகளின் குடிநீர் இணைப்புகள் குடிநீர் வாரிய அதிகாரிகளால் துண்டிக்கப்பட்டது.

இதுபோன்ற முறைகேடுகளில் பொதுமக்கள் ஈடுபடவேண்டாம் எனவும் அவ்வாறு ஈடுபடும் வீடுகளின் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படுவதோடு அவர்கள் மறு இணைப்பு பெறுவதற்கு அபராதத் தொனையாக ரூ.10,000/–(ரூபாய் பத்திாயிரம்)மும், மறு இணைப்பு கட்டணமாக ரூ.7,500/–(ரூபாய் ஏழாயிரத்து ஐநூறும்) சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டும் எனவும், இதுபோன்ற சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் எனவும் வாரியம் எச்சரித்துள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்







